# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 8. குடும்ப வைத்திய சேவைகளை ஆரம்பித்தல்

பொது மருத்துவ சேவை /ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு சேவைகளை மீண்டும் ஆரம்பித்தலானது பாரபட்சமற்ற சிகிச்சை மற்றும் நோயாளிகளின் நோய்நிலைகளை இனங்கண்டு அதனால் வரும் ஆபத்தினைத் தரப்படுத்துதல் ஆகியவற்றிக்கு அவசியமாகும். இது இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் வெளி நோயாளர் பிரிவுகளுக்கு நோயாளர்கள் வருகை தருவதனை சீராக்கும்.

பொதுவான விதிகளும் நியமங்களும்

- மேலைத்தேய வைத்தியம் மேற்கொள்வதற்கு இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களுக்கே அனுமதி உண்டு.
- மருத்துவர்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்வதற்கு உதவியாகப் புதுப்பிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் அவர்களுக்கு வழங்கப்படும். மேலும் நோயாளிகள் மற்றும் மருத்துவர்கள் மற்றும் பிற ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவர்களின் நடைமுறைகளை எவ்வாறு மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.
- சட்டவிரோதமாக மேலைத்தேயே வைத்திய சிகிச்சைகளில் ஈடுபடுகின்ற, இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்படாதவர்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தொற்றுத்தடைக் காப்பு மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவார்கள்.
- இலங்கை மருத்துவ சபையினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழானது தனியார் மருத்துவ நிலைய வாயிலில் நன்கு தெரியும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- "COVID எனச் சந்தேகத்திற்குரிய நோயாளர்" என்ற சிகிச்சை வரைவிலக்கணத்திற்குள் வரும் நோயாளிகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின் படி அருகிலுள்ள COVID சிகிச்சை மையத்திற்குப் பரிந்துரைக்கப்பட வேண்டும்.
- வரிசையில் காத்திருப்பதைத் தவிர்ப்பதற்காக முற்பதிவு முறையானது ஊக்குவிக்கப்பட வேண்டும் (இலத்திரனியல் மருத்துவப் பதிவானது மருத்துவ ஆலோசனையின் போது செலவிடப்படும் நேரத்தினைக் குறைக்க உதவும்). காணொளி மூலமான மருத்துவ ஆலோசனை ஊக்குவிக்கப்படுகிறது
- முற்பதிவுகள் வழங்கலின் போது, நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஒவ்வொரு அமர்வின் தொடக்கத்திலும் முற்பதிவுகள் வழங்க ஊக்குவிக்கவும்.
- பொது மருத்துவர் மருத்துவ ஆலோசனை வழங்கும் போது முகக்கவசம் அணிய வேண்டும். ஒவ்வொரு நோயாளியையும் பார்வையிட்ட பின்னர் கை கழுவுதல் அல்லது கை தூய்மிப்பானது மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அதிக ஆபத்தான மருத்துவம்சார் செயற்பாடுகளில் ஈடுபடும் போது (உதாரணமாக தொண்டையைப் பரிசோதித்தல்) மருத்துவர் முகக்கவசம் மற்றும் முகத் தடுப்பு / கண்ணாடி ஆகியவற்றுடன் முழுமையான தனிநபர் பாதுகாப்பு சாதனத்தினை அணிய வேண்டும். அவரது உதவியாளர்களும் இதேபோன்ற பாதுகாப்பு உபகரணங்களை அணிய வேண்டும்.
- சிகிச்சை நிலையமானது முறையான சுத்திகரிப்பு, தொற்றுநீக்கல் மற்றும் கழிவகற்றல் முறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும்.

மருத்துவ ஆலோசனை பெற வருகைதரும் நோயாளிகள்

- அனைத்து நோயாளிகளும், உடன் வருபவர்களும் முகக்கவசம் அணிய வேண்டும்.
- நோயாளிகள் தமக்கிடையே ஒரு மீற்றர் இடைவெளியில் அமர்ந்திருக்க வேண்டும்.
- நோயாளிகளுக்கென கை கழுவும் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் அல்லது கை தூய்மிப்பான் வழங்கப்பட வேண்டும்.

- *காத்திருப்பு பகுதி மற்றும் மருத்துவ ஆலோசனை அறைக்குள் நோயாளி நுழைவதற்கு முன்பு COVID க்கான முன்ஆய்வு (தொடர்புடைய கேள்விகளைக் கேட்பதன் மூலம்) மேற்கொள்ளப்பட வேண்டும். மருத்துவ ஆலோசனைக்கான முற்பதிவு மேற்கொள்ளும்போதோ அல்லது பின்னர் ஒலி ஒளி கட்டமைப்பினையோ இன்றேல் அலைபேசி யினைப் பயன்படுத்தியோ இந்த முன்ஆய்வினை மேற்கொள்வதே மிகவும் பொருத்தமானது.*

*அறிவுறுத்தும் முறைகள்*

- *நோயாளிகள் காத்திருக்கும் பகுதியில் அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.*




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020